*KALAM – International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*12 (1), 2019*

# பாட வீட்டுப்பணிகளைப் பூர்த்திசெய்வதில் வறுமையான வீட்டுச்சூழலின் தாக்கம்: அதிகஷ்டப் பிரதேச முஸ்லிம் பாடசாலைகளை மையப்படுத்திய ஓர் ஆய்வு

**A.H.Rifas**
Department of Islamic Studies
Faculty of Islamic Studies and Arabic Language
South Eastern University of Sri Lanka

**M.I.M.Jazeel**
Department of Islamic Studies
Faculty of Islamic Studies and Arabic Language
South Eastern University of Sri Lanka

**M.M.Sithy Fathima**
Zonal Educaion Office Akkaraipattu
Ministry of Education, Sri Lanka.

ahrifas@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**
மாணவர்களுக்கு வழங்கப்படும் தனிச் செயற்பாடு, குழுச்செயற்பாடு போன்ற வீட்டுப்பணிகள் மாணவர்களின் கல்வி அடைவுகளை மேம்படுத்திவிடுகிறது. பொதுவாக குடும்ப வறுமை மாணவனின் தாழ்ந்த செயலாற்றலுக்கு வழிகோலுகிறது. வகுப்பறையில் வழங்கப்படும் பாட வீட்டுப் பணிகளைப் பூர்த்திசெய்வதில் வறுமையான வீட்டுச்சூழலும் பொருளாதார நெருக்கடிகளும் ஏற்படுத்தும் தாக்கத்தினை பரீட்சித்தலை நோக்காகக் கொண்ட இக்கற்கை அடுக்கு மாதிரியினைப் (Stratified sampling) பயன்படுத்தி தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் *(48)*, பெற்றோர்கள் *(48)* மற்றும் ஆசிரியர்கள் *(14)* போன்றோரிடமிருந்து பெறப்பட்ட தரவுகள் விபரணப் பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டது. வறுமையான வீட்டுச்சூழலில் கற்கும் அறை, கணணி உபகரணங்கள், நூல்கள், தளபாடங்கள், மின்சார வசதி, பெற்றோரின் ஒத்துழைப்பு என்பன போன்ற தேவையான பௌதீக வளங்களின் பற்றாக்குறை, க்'டப்பிரதேச முஸ்லிம் பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலை வீட்டுப்பணிகளை வினைத்திறனாகவும் வினைத்திறனாகவும் வெற்றிகரமாகவும் பூர்த்திசெய்வதில் பாரிய தடயங்களை ஏற்படுத்தியுள்ளது என்பது இவ்வாய்வின் பிரதான கண்டறிதலாகும். எனவே, இப்பிரதேசத்தில் வறுமையான வீட்டுச் சூழல் மாற்றியமைப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்வதற்கு இவ்வாய்வு ஆதாரமாக அமையவல்லது.

**பிரதான சொற்கள்:** வறுமை, குடும்பச் சூழல், பாட வீட்டுப்பணிகள், அதிகஷ்டப் பிரதேச பாடசாலை

## 1. ஆய்வின் அறிமுகம்

பாடசாலைக்கு வெளியில் இருந்து வரும் செல்வாக்குகள் கல்வி மீது பெருமளவில் அதிகரித்துள்ளன. இதனடிப்படையில் 'மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு மகிழ்ச்சிகரமான சூழல் அவசியம்' (சந்திரசேகரன், *2008*) என்ற கல்வியலாளர்களின் கருத்து இங்கு கவனிக்கப்படல் வேண்டும். அதாவது கற்றலில் ஈடுபடும் மாணவர்களின் பௌதீக, சமூக, உடல், உளவியற் சூழல் மகிழ்ச்சியானதாகக் காணப்பட வேண்டும் என்பதனையே இது சுட்டிக்காட்டுகின்றது. மகிழ்ச்சிகரமான சமூகச் சூழல் என்பது மாணவர்களின் கற்றலுக்குச் சாதகமாகக் காணப்படுவதனைக் குறிக்கின்றது. தாயும், குடும்பமுமே பிள்ளையின் முதலாவது சூழலாக அமைகிறது. குடும்பக் கட்டமைப்பு, குடும்ப

உறவினர்களுக்கிடையேயான பரஸ்பர தொடர்புகள், தங்களது நடிபங்குகளை ஒவ்வொருவரும் பொறுப்புணர்ச்சியுடன் நிறைவேற்றுதல், முதலியன குழந்தை வளரும் சூழலில் செல்வாக்குச் செலுத்துகின்றன (சந்திரசேகரன், 2008) மேலும் குடும்ப வசதிகள், நெருக்கம், மொழிப்பிரயோகம், தளபாடங்கள், பொழுதுபோக்குகள், குழந்தை வளர்ப்பு முறை, பெற்றோரின் முதிர்ச்சிப் பண்புகள், சகோதரர்களுக்கிடையிலான வயது வீச்சு, கட்டுப்பாட்டு முறைகள் போன்றனவும் குழந்தையின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றது (ஜெயராசா, 2005)

குடும்ப வறுமை என்பது ''பொருளியிலாளர்களின் கருத்தின்படி ஆகக்குறைந்தளவிலான வருமானத்தைக் கொண்டிராத, பெறாத குடும்பமாகும்'' (ஊஅநடளநச ரூ டீயடவநளஇ 2001). சர்வதேச ரீதியாக நோக்கின் ஒரு நாளைக்கு ஒரு டொலரை விட குறைந்தளவிலான வசதியினைக் கொண்ட குடும்பம் ஆகும். ''அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள், மின்சாரம், நீர்வசதி, போக்குவரத்து மற்றும் கல்வி என இதற்குள் உள்ளடக்கலாம். இவற்றைப் பெற்றுக்கொள்வதில் உள்ள பிரச்சினைகள் காரணமாகவே இன்று உலகில் பல நாடுகளில் மக்கள் வறுமையில் வாடுகின்றனர்'' (Rifas et al, 2018b). குடும்ப வறுமை பாடசாலையில் தாழ்ந்த செயலாற்றலை உண்டு பண்ணினாலும் உற்சாகமூட்டும் ஆதரவான வீட்டுச் சூழல் அதனை வெற்றிகொள்வதாக அமையும். இதனால் பாடசாலைக் கல்வியில் பிள்ளை வெற்றிபெறுவதற்கு பாடசாலைச் சூழலுடன் வீட்டுச் சூழலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும் (ப்ரோ.ஃ.பி, 2007). ஒரு மனிதனுக்கான அடிப்படையான சில தேவை எனும் போது அவன் பெற்றிருக்க வேண்டிய கல்வி, சுகாதாரம், போதியளவான இடவசதி போன்றனவும் அது உள்ளடங்கியதாகும்.

வீட்டுச்சூழலை எடுத்து நோக்கின் பிள்ளைக்குக் கற்பதற்கான இடவசதி, ஒளி, காற்றோட்டம், தளபாடம் மற்றும் பிள்ளைகளுக்குத் தேவையான கற்றல் உபகரண வசதிகள் போன்றவற்றுடன் குடும்ப அங்கத்தவர்களுக்கிடையிலான மனவெழுச்சிசார் பிணைப்புக்களும் சிறந்த வகையில் அமைய வேண்டும். வீட்டுப்பணி என்றால் ''பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்துவதற்காக பாடசாலை ஆசிரியர்களால் அவர்களுக்கு ஒப்படைக்கப்படுகின்ற பணிகளே வீட்டுப் பணிகளாகும். இது ஆசிரியர்களின் கற்பித்தல் தந்திரோபாயமாகக் காணப்படுகின்றது'' (Cooper, 1989). மேலும், குயின்லாந்தின் கல்வி மற்றும் கலாசாரத் திணைக்களத்தின் அறிக்கையின் படி (2004) ''பாடசாலை நேரத்திற்குப் புறம்பாக பாடவிடயம் சார்ந்து மாணவர்களுக்கு ஒப்படைக்கப்படுகின்ற எந்த ஒரு செயற்பாடும் வீட்டுப் பணியாகும்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்திரசேகரன் (2008) குறிப்பிடுகையில் மேலைநாடுகளில் உள்ள பாடசாலைகள் மாணவர்களின் வீட்டுப் பணிகளை முறையான ஒரு பழக்கமாக விருத்திசெய்ய சில நியமங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. சில பாடசாலைகளின் நியமங்களின் படி முதலாம் வகுப்பு மாணவர்கள் ஒரு நாளைக்கு வழங்கப்படும் பத்து நிமிடங்களுக்கு வீட்டுப்பணிகளைச் செய்ய வேண்டும். பின்னர் ஒவ்வொரு வகுப்பிற்கும் தொடர்ச்சியாக வீட்டுப் பணிகளுக்கான நேரம் பத்துப் பத்து நிமிடங்களாக அதிகரித்துச் செல்லப்படும். கற்றல், கற்பித்தல் செயற்பாடனாது இன்று கடத்தல் வகிபாகத்திலிருந்து (Transfer Role) நிலைமாற்றல் வகிபாகத்திற்கு (Transformation Role) மாற்றமடைந்துள்ளது. இதன் மூலம் மாணவர்களை சம ஆளுமை கொண்ட நற்பிரஜைகளாக உருவாக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு இன்று ''தேர்ச்சி மையக் கலைத்திட்டம்'' அறிமுகப்படுத்தப்பட்டு ''கற்றலுக்கு கற்றல்'' தேர்ச்சி ஊடாக மாணவர்களின் சுயகற்றலை மேம்படுத்தும் செயற்பாடுகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளன. சுய கற்றலுக்கும் தேடலுக்குமான வாய்ப்பாக பாடசாலைகளில் பாடசிரியர்களால் வழங்கப்படும் வீட்டுப்பணிகள் அமைகின்றன.

ஒரு மாணவன் கல்வியை ஆரம்பித்த நாளிலிருந்து அவனது வாழ்வின் ஒரு பகுதியாக வீட்டுப் பணி மாறிவிடுகின்றது என அமெரிக்கக் கல்வித்திணைக்களம் கூறுகின்றது.

வீட்டுப்பணியானது பிள்ளையின் சிந்தனைத்திறனையும், நினைவுபடுத்தும்திறனையும் விருத்திசெய்வதுடன் பிள்ளையிடம் சுயமாகக் கற்கின்ற ஆர்வத்தையும், வீட்டிலே சுயமாகக் கற்கும் பழக்கத்தையும் வளர்ப்பதாக அமைவதால் அது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. மேலும், நேரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்தக் கற்றுக்கொள்வதற்கும், பொறுப்புக்களை ஏற்று அதனை நிறைவேற்றும் பண்பினைக் கற்றுக் கொள்வதற்கும் கற்றல் செயற்பாடுகளில் சுதந்திரமாக பங்குகொள்வதற்கும் வீட்டுப்பணி உதவுகின்றது. பிள்ளைகள் தமக்கு வழங்கப்படுகின்ற வீட்டுப் பணிகளைச் செய்கின்ற வேளைகளில் யாராவது ஒரு பெரியவர் தம் அருகில் இருப்பதனை விரும்பலாம். இவ்வேளைகளில் பிள்ளைகளிடம் குறைகாண்பதாகவோ அல்லது குழப்புவதாகவோ இல்லாமல் அவர்களுக்கு வழிகாட்டுபவராக இருத்தல் வேண்டும்.

எனவே, ஆசிரியர்கள் வீட்டுப்பணிகளை ஒப்படைக்கும் போது மாணவர்களின் உறைதிறன்களைக் கருத்திற்கொள்ளுதல் முக்கியமானதாகும். இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் பெரும்பாலானோர் பொதுவாக வறுமைநிலைக்குள் வாழ்பவர்களாகவும் கல்வி தொடர்பான விழிப்புணர்வு குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். மேலும், இம்மக்கள் விவசாயம், மீன்பிடிஇ கூலித் தொழில் போன்ற தொழில்களில் அதிகம் ஈடுபடுகின்றனர் (Rifas et al, 2018b). மேலும் அரசஇ அரசசார்பற்ற நிறுவனங்களில் தொழில்புரியும் உத்தியோகத்தர்கள் மிகக் குறைவாகும். இத்தகைய பண்புகளை பின்னணியாகக் கொண்ட அட்டாளைச்சேனைக் கோட்டமே ஆய்வுக்களமாக அமைகின்றது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

பாடசாலையைப் பற்றியும் ஆசிரியரைப் பற்றியும் பெற்றோர் கொண்டிருக்கும் அபிப்பிராயம் குழந்தையின் வீட்டுப்பணிகள் பற்றிய அக்கறையில் செல்வாக்கு செலுத்துவதாக அமைகின்றது (ஹேய்ம், 2001). ஆசிரியர்களால் வழங்கப்படுகின்ற வீட்டுப்பணிகளை மாணவர்கள் தங்களது குடும்பத்தினரது உதவியின்றிப் பூரணப்படுத்துவதில் சிரமப்படுகின்றனர். எனினும், பெற்றோர் பிள்ளைகளின் வீட்டுப்பணிகள் குறித்து பொறுப்புக்களைத் தாமே எடுத்துக்கொள்ளும் போது பிள்ளைகள் இப்பணிகளிலிருந்து விடுபடவேண்டிய நிலை தோன்றும். எனவே, அதிக்'டப் பிரதேசப் பாடசாலை மாணவர்கள் தமது பாட ஆசிரியர்களால் வழங்கப்படும் வீட்டுப்பணிகளைச் சிறப்பாகப் பூர்த்திசெய்வதற்கு போதுமான பங்கினை அவர்களது வறுமையான வீட்டுச்சூழல் வழங்கவில்லை. இதனடிப்படையில் அதிக்'டப் பிரதேசப் பாடசாலை மாணவர்களின் வறுமையான வீட்டுச் சூழல், தமக்கு வழங்கப்படும் பல்வேறு வகையான வீட்டுப் பணிகளைப் பூர்த்தி செய்வதில் எத்தகைய பங்கினை வகிக்கின்றது என்பதனையும், பெற்றோர் இதற்கான வசதிகளை எந்தளவுக்குப் பெற்றுக்கொடுக்கின்றனர் என்பதனையும் ஆய்வுசெய்யும் நோக்கில் அமைகின்றது.

## 3. ஆய்வின் நோக்கங்கள்

- ✓ மாணவர்களுக்கு வகுப்பாசிரியர்களால் அதிகமாக வழங்கப்படும் வீட்டுப் பணிகளின் வகைகளையும், அதனை வழங்கவேண்டியதன் அவசியத்தினையும் அறிந்துகொள்ளல்.
- ✓ மாணவர்கள் தமது வீட்டுப்பணிகளைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமான வறுமையான வீட்டுச்சூழலுடன் தொடர்பான பௌதீக மற்றும் குடும்பக் காரணிகளை இனங்காணல்.
- ✓ அதிக்'டப் பிரதேச மாணவர்கள் தமது பாட வீட்டுப்பணிகளைப் பூர்த்திசெய்வதில் எதிர்கொள்ளும் வறுமையான வீட்டுச்சூழலுடன் தொடர்பான பொருளாதாரத் தடைகளை கண்டறிதல்.

## 4. ஆய்வின் அவசியம்

### 4.1 *வீட்டுப் பணியும் அதன் முக்கியத்துவமும்*

வீட்டுப் பணிகள் கற்றலில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனடிப்படையில் வீட்டுப் பணிகளின் முக்கியத்துவத்தினை பின்வருமாறு நோக்கலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சுறுசுறுப்பாகச் செயல்களில் ஈடுபடச்செய்யும் பாடசாலை அமைப்பின் மத்தியிலும் சில வேளைகளில் கவனத்தை கலைக்கும் பாடசாலை அமைப்பின் மத்தியிலும் அனுமதிக்கக் கூடியதை விட, அதிகளவில் விடயங்களைப் பற்றி மாணவர்கள் சிந்திப்பதற்கு இது இடமளிக்கின்றது. அத்துடன் அவ்விடயங்களுடன் மேலும் அதிகளவில் நெருங்கி பரிச்சயப்படுத்துவதற்கு வீட்டுப் பணிகள் வழிவகுக்கின்றன. பெரும்பாலும் வீடுகளில், ஆக்கபூர்வமான செயற்பாடுகளை விட, மாணவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதுடன் வீட்டுப் பணிகள் போட்டியிடுகின்றன. (சந்திர சேகரன், 2008)

### *4.2 வீட்டுப் பணிகளுக்கும் வீட்டுச் சூழலுக்கும் இடையிலான தொடர்பு*

வீட்டுப் பணிகளுக்கும், வீட்டுச் சூழுலுக்கும் இடையிலான தொடர்பினைப் கண்டறிய முற்படும் போது, வீட்டுடன் தொடர்பான பௌதீகக் காரணிகள் மற்றும் குடும்பக் காரணிகள் போன்ற காரணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பிள்ளை வீட்டுப் பணிகளில் ஈடுபடுவதற்கான இடமானது வீட்டுடன் தொடர்பான ஒரு தனியான அறையாக, அறையின் ஒரு மூலையாக, படுக்கையறையில் உள்ளதொரு மேசையாக அல்லது சமையலறையில் உள்ளதொரு மேசையாகக் கூட இருக்கலாம். ஆனால் இவ்விடம் போதிய வெளிச்சம், அமைதி, காற்றோட்டம் உள்ளதாக இருக்க வேண்டும். அத்துடன் வீட்டுப் பணிகளை பூர்த்தி செய்வதற்கான உபகரண வசதிகள் காணப்பட வேண்டும் என்பதுடன் இவற்றை ஓரிடத்தில் வைக்கவும், அவற்றைப் பயன்படுத்தப் பழகுவதும் முக்கியமானதாகும். உதாரணமாக பேனைகள், பென்சில்கள், நிறங்கள், காகிதாதிகள் மற்றும் இதர பொருட்கள் போன்றவற்றை ஓரிடத்தில் வைத்தல். (US Epartment of Education, 2008).

மேலும் குடும்பத்தின் பருமன், பெற்றோரின் கல்வியறிவு மட்டம், பெற்றோர், அங்கத்தவர்களைப் பிரிதல் அல்லது இழத்தல், பெற்றோர் வேலைக்கு செல்லல் (உள்நாடு, வெளிநாடுகளில்) குடும்பத்தில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஏனைய அங்கத்தவர்கள், குடும்பத்திலுள்ள வளர்ந்தோர், குடும்ப அங்கத்தவர்களுக்கு இடையேயான பரஸ்பர நல்லுறவு, பெற்றோரின் தொழில் நிலை, வீட்டிலுள்ள தொடர்பு சாதனங்கள், பெற்றோரின் கண்டிப்பு, அன்பு, பெற்றோர் பிள்ளைகளுக்கு வீட்டுச் சூழலை ஒழுங்கு செய்து கொடுத்தல் போன்றனவும் பிள்ளைகள் வீட்டுப் பணிகளைப் பூர்த்தி செய்வதில் செல்வாக்குச் செலுத்தக் கூடியன. இது போல் ஒவ்வொரு குழந்தையின் கல்வியிலும் பாடசாலை, பெற்றோர் ஆகிய இரு தரப்பினருக்கும் இடையிலான நெருக்கமான தொடர்பு, கல்வி ரீதியான முன்னேற்றத்துக்கு அவசியமாகும்.'' எனவே தமது பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர் சம்பந்தப்படுவதற்கு பெற்றோர், ''வாடிக்கையாளர்'' என்றில்லாமல் பங்காளராக மாறவேண்டும். எந்த வீட்டில் வாசிப்பதும் எழுதுவதும் நாளாந்த கடமைகளில் ஒன்றாக இருக்கின்றதோ அவ்வீட்டுச்சூழல் குழந்தையின் எழுத்தறிவு வளர்ச்சியில் நேர்த்தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. *(செல்வராஜா 2006).*'' ''*(கருணாநிதி 2008)* என்பவர் குறிப்பிடுகையில் பிள்ளைகள் நாளாந்தம் ஈடுபடும் வேலைகளில் கவனமெடுத்தல், பிள்ளைகளின் ஒப்படைகள், செயற்றிட்டங்களுக்கு உதவுதல், பாடசாலையில் நடைபெறும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுதல், பாடசாலை மற்றும் ஆசிரியர்களுடன் தொடர்புகளைப் பேணுமாறு கூறுதல், பாடசாலை மற்றும் வகுப்பறை பற்றிய கூட்டங்களில் கலந்து கொள்ளல்'' என்கின்றார்.

## 5. இலக்கிய மீளாய்வு

படிமோர் (Batimore) எனும் இடத்தில் எப்ஸ்ரீனும் ஏனையோரும் ''.இடைநிலை மாணவர்களின் வீட்டுப் பணியில் பெற்றோரின் பங்கு'' என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் '' பெற்றோர் பங்குபற்றுதலுடன் வீட்டுப் பணியினை மேற்கொள்ளும் போது அடைவுச் சோனைகளில் மாணவர்கள் அதியுயர் புள்ளிகளைப் பெறுவதுடன் சிறந்த உளப்பாங்கையும், ஒழுக்கத்தையும் விருத்தி செய்கின்றனர்'' என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது (Epstein et al, 1997). மேற்கூறப்பட்ட அதே இடத்தில் ''பாடசாலை-குடும்ப உறவும், மாணவர் கற்றலும்'' என்ற தலைப்பில் லீ என்பவர் மேற்கொண்ட ஆய்வில் ''உயர் பாடசாலை மாணவர்களின் வீட்டுப் பணிகளில் பெற்றோரின் வகிபங்கானது அவர்களின் கற்றல் வெற்றிக்கு உதவியுள்ளது'' எனக் கண்டுகொண்டார் (Lee,1994). மேலும், ராலெவும் வீபலும் ''வீட்டுப் பணிகளை பூர்த்தி செய்தல்'' எனும் தலைப்பில், கலிபோர்ணியாவை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் குடும்ப வாழ்வில் கிடைக்கும் ஓய்வுநேரங்களைப் பயன்படுத்துவதற்கும், வீட்டு மற்றும் தனிப்பட்ட வேலைகளைச் செய்வதற்கும் முடியாததான ஒரு வேண்டத் தகாத ஒன்றாக வீட்டுப் பணி அமைகின்றது என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (Kralovee and Bull, 2001).

அட்டவணை *1* - பிரித்தானியாவில் பாட வீட்டுப் பணிகளுக்கான நேர ஒதுக்கீடு

| வகுப்பு | நேரஒதுக்கீடு |
|---|---|
| ***தரம் 01 – 02*** | ஒரு நாளைக்கு *12* நிமிடத்திற்கு மேற்படாமல் |
| ***தரம் 03 – 04*** | ஒரு நாளைக்கு *18* நிமிடத்திற்கு மேற்படாமல் |
| ***தரம் 05 – 06*** | ஒரு நாளைக்கு *30* நிமிடத்திற்கு மேற்படாமல் |
| ***தரம் 07 – 08*** | ஒரு நாளைக்கு *45 – 90* நிமிடத்திற்கு மேற்படாமல் |
| ***தரம் 09*** | ஒரு நாளைக்கு *60 – 120* நிமிடத்திற்கு மேற்படாமல் |
| ***தரம் 10 – 11*** | ஒரு நாளைக்கு *120* நிமிடத்திற்கு மேற்படாமல் |

Souce : http://www.dfes.gov.uk/homework/summary.pdf

மேலும், ''வீட்டுப் பணிகளை நிறைவேற்றுவதில் பெற்றோர் பங்குபற்றல்'' அமெரிக்கா, கொரிய மாணவர்களின் விருப்பை அறிவதனை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இன்னுமொரு ஆய்வில் ''அமெரிக்கா மாணவர்கள் வயதானவரின் உதவியுடன் கற்பதற்கும், வீட்டுப் பணிகளை மாணவர்கள் பூர்த்தி செய்வதற்கு பாதுகாப்பான, அமைதியான ஒரு இடம் தேவை, பெற்றோர் உபகரண உதவிகளை செய்து கொடுக்க வேண்டும், பிள்ளைகளுக்கு வீட்டுப் பணிகளை பூர்த்தி செய்வதில் பெற்றோர் உதவுதல் வேண்டும்'' எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கை கல்வியமைச்சு, உலக வங்கியின் அனுசரணையுடன் தேசியகல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டுக்கான நிலையம் *2007* ல் ''இலங்கையில் *8*ம், *10*ம் தர மாணவர்களின் அடைவு பற்றிய தேசியகணிப்பீடு'' என்ற ஆய்வறிக்கையில், மாணவர்களின் வீடு மற்றும் குடும்ப பின்னணி என்பன மாணவர்களின் அடைவுமட்டத்தில் செல்வாக்குச் செலுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. மேலும், கதிரமலை ஆறுமுகம் *(2000)* என்பவர் கேகாலை கல்விக் கோட்ட தமிழ்ப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ''மாணவர்களின் கல்வி அறிவுமட்ட விருத்திற்கு பெற்றோரின் பங்குபற்றலை மேம்படுத்துவதில் அதிபரின் பங்கு'' என்ற தலைப்பிலான ஆய்வில் '' பாடசாலை அடைவு மட்டத்தில் வீட்டுக்காரணிகள் மிகவும் முக்கிய செல்வாக்குச் செலுத்தும் அதே வேளை

இக்காரணிகள் மாணவர்களுக்கு சரியான முறையில் வழிகாட்டவும், வளர்த்தெடுக்கவும் தவறியுள்ளன" எனக் கண்டறிந்தார். அத்துடன் பாடசாலைக்கும், வீட்டுக்கும் இடையிலான தொடர்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்ற விதந்துரையையும் வழங்கியுள்ளார். இந்த அடிப்படையில் வறுமையான வீட்டுச் சூழலுடன் தொடர்பான ஆய்வுகள் இலங்கையில் செய்யப்படாமலிருப்பதால் இவ்வாய்வு அவ்விடைவெளியினை பூர்த்திசெய்வதற்கு எத்தனிக்கின்றது.

## 6. ஆய்வு முறைமை

கல்விசார் பிரச்சினைகளை மையப்படுத்திய இவ்வாய்வானது பண்புசார் அளவைநிலை ஆய்வாக நோக்கப்படுகின்றது. நேர்காணல், மற்றும் வினாக்கொத்து மூலம் பெற்ற முதலாம் நிலைத்தரவுகளையும், இரண்டாம் நிலைத்தரவுகளாக பெறப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் என்பனவற்றையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெறப்பட்ட தரவுகள் விபரணப் பகுப்பாய்வு மூலம் Microsoft Excel என்ற கணனி மென்பொருள் உதவியுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

### 6.1 ஆய்வுப் பிரதேசம்

அக்கரைப்பற்று வலயத்தில் காணப்படும் அட்டாளைச்சேனைக் கல்விக் கோட்டத்தில் *27* மொத்தப் பாடசாலைகளில் 1AB வகைப் பாடசாலைகள் நான்கும், *(04)* 1C வகைப் பாடசாலைகள் மூன்றும் *(03)*, வகை-ஐஐ பாடசாலைகள் ஆறும் *(06)*இ வகை-III பாடசாலைகள் பதினைந்தும் *(15)* காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் *10514* மாணவர்கள், *1500* ஆசிரியர்கள் காணப்படுகின்றனர் (அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகம், *2018*). இக்கோட்டத்தினுள் ஆய்வினை மேற்கொள்ளும் முகமாக "அதிக்'டப் பிரதேச பாடசாலை" எனும் வகைப்பாட்டினுள் அமைந்துள்ள பாடசாலைகளுள் மூன்று கிராமங்களிலிருந்தும் மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

### 6.2 மாதிரி எடுப்பு

அளவு, பண்பு ரீதியிலான இவ்வாய்வு, தெரிவுசெய்யப்பட்ட மூன்று பாடசாலைகளிலும் தரம் ஆறாம், ஏழாம், எட்டாம் மற்றும் ஒன்பதாம் வருடங்களில் கல்வி கற்கும் மொத்த மாணவர்களிலிருந்து பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை, ஆண் பெண் விகிதாசாரம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அடுக்கு மாதிரியினைப் (Stratified sampling) பயன்படுத்தி தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் *(48)*, பெற்றோர்கள் *(48)* மற்றும் ஆசிரியர்கள் *(14)* என மொத்தமாக *110* பேரிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு அடிப்படையிலானது.

அட்டவணை *2* - ஆய்வுக்காக தெரிவுசெய்யப்பட்ட மாணவர், பெற்றோர், மாதிரி விபரம்

| பாடசாலை | மாணவர்கள் தரம் - 06, 07, 08, 09 | | | மாதிரிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மாணவர் மாதிரி | பேற்றோர் மாதிரி | ஆசிரியர் மாதிரி | மொத்த மாதிரிகள் |
| **அக் / அல் ஜாயிஸா வித்தியாலயம்** | 79 | 76 | 155 | 09 | 08 | 17 | 17 | 05 | 39 |
| **அக் / அல் ஹிக்மா வித்தியாலயம்** | 132 | 71 | 203 | 14 | 07 | 21 | 21 | 06 | 48 |
| **அக் / கரடிக்குளம்** | 46 | 45 | 91 | 05 | 05 | 10 | 10 | 03 | 23 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **றகுமானிய்யா வித்தியாலயம்** | | | | | | | | | |
| **மொத்தம்** | 257 | 192 | 449 | 28 | 20 | 48 | 48 | 14 | 110 |

*(மூலம்: அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகம், 2018)*

## 7. கண்டறிதல்களும் கலந்துரையாடலும்

### 7.1 *மாணவர்களுக்கு வீட்டுப் பணிகளின் வகைகளும், அவற்றை வழங்க வேண்டியதன் அவசியமும்*

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட அட்டாளைச்சேனைக் கோட்ட அதிக்'ட பாடசாலைகள் மூன்றிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபடங்கள் போன்றவற்றின் உதவியுடன் விளக்கப்படுகின்றன. இதன்படி மாணவர்கள் தங்களது நேரங்களை பயனுள்ளதாக கழிப்பதற்கு வீட்டுப்பணிகள் அவசியமாகவுள்ளதனை அனைவரும் ஏற்கின்றனர். இதன் மூலம் மீட்டல், புதிய துறைககள் அறியப்படல், விரிவான விளக்கங்களைப் பெறல் என்பன சுட்டிக்காட்டத்தக்கது. ஆய்வின் தரவின் படி பெரும்பாலானோர் (70%) கற்றதை நினைவுபடுத்த பாடவீட்டுப் பணிகள் அதிகம் உதவும் அதேவேளை குறைந்தளவானோரின் (30%) கருத்துப்படி ஓரளவு உதவுவதாகவும் குறிப்பிடப்படுகிறது. எனவே, வீட்டுப்பணிகள் மாணவர்களக்கு பயனுள்ளதாகவே காணப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

*அட்டவனை 3 - மாணவர்களுக்கு வீட்டுப் பணிகள் வழங்க வேண்டியதன் அவசியம்*

| | **மீடிறன்** | **வீதம்** |
|---|---|---|
| **அதிகம்** | 28 | 70 |
| **ஓரளவு** | 20 | 30 |
| **குறைவு** | 0 | 0 |
| **மொத்தம்** | 48 | 100 |

*(மூலம்:- மாணவர்களுக்கான வினாக்கொத்து அளவியல், 2018)*

***அட்டவனை 4*** *- மாணவர்களுக்கு வகுப்பாசிரியர்களால் வழங்கப்படும் வீட்டுப்பணிகளின் வகைகள்*

| | **மீடிறன்** | **வீதம்** |
|---|---|---|
| **தனிச்செயற்பாடு** | 46 | 95.8 |
| **குழுச்செயற்பாடு** | 2 | 4.2 |
| **மொத்தம்** | 48 | 100 |

*(மூலம்:- மாணவர்களுக்கான வினாக்கொத்து அளவியல், 2018)*

இதன்படி ஆய்வு மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட மிக அதிகமான (95.8 வீதம்) மாணவர்களிடமிருந்து அதிகமான வீட்டுப்பணிகள் தனிச்செயற்பாடாகவும், மிகச் சொற்பமானவர்கள் (4.2 வீதம்) குழுச்செயற்பாடாகவும் வழங்கப்படுகின்றன. மேலும், பாடங்களின் அடிப்படையில் வகுப்பு ஆசிரியர்களால் மாணவர்களுக்கு வழங்கப்படும் வீட்டுப் பணிகளின் அளவு தொடர்பாகக் அறியப்பட்ட போது அனைத்து மாணவர்களும் தனித்தனியே வேலைசெய்ய வேண்டியுள்ளனர். பாடங்களின் அடிப்படையில் ஆசிரியர்களால் மாணவர்களுக்கு வழங்கப்படும் வீட்டுப்பணிகளின் அளவு பின்வருமாறு

அட்டவணை 5 - மாணவர்களுக்கு வழங்கப்படும் வீட்டுப்பணிகளின் அளவு

| | அதிகம் | வீதம் | ஓரளவு | வீதம் | குறைவு | வீதம் | மிகக் குறைவு | வீதம் | மொத்த வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **தமிழ்** | 18 | **37.5** | 30 | **62.5** | 0 | **0** | 0 | **0** | 100 |
| **கணிதம்** | 38 | **79.2** | 8 | **17** | 2 | **4.2** | 0 | **0** | 100 |
| **சமயம்** | 5 | **10.4** | 32 | **66.7** | 10 | **20.8** | 1 | **2** | 100 |
| **ஆங்கிலம்** | 23 | **48** | 18 | **37.5** | 6 | **12.5** | 1 | **2** | 100 |
| **விஞ்ஞானம்** | 27 | **56.3** | 16 | **33.3** | 4 | **8.3** | 1 | **2** | 100 |
| **வரலாறு** | 23 | **48** | 15 | **31.25** | 9 | **18.75** | 1 | **2** | 100 |

*(மூலம்:- மாணவர்களுக்கான வினாக்கொத்து அளவியல், 2018)*

இதன்பிரகாரம் கணிதபாடத்தில் மிக அதிகம் வீட்டுப் பணிகள் (79.25%) வழங்கப்படுகின்றன. சிலர் (17%) ஓரளவு வீட்டுப் பணிகள் வழங்குகின்றனர். தமிழ் பாடத்தில் மூன்றில் ஒரு பகுதியினர் (37.5%) அதிகம் வீட்டுப்பணிகளை வழங்கும் அதேவேளை பெரும்பாலானோர் (62.5%) ஓரளவே வீட்டுப்பணிகள் வழங்குகின்றனர். சமயப்பாடத்தில் அதிகமாக வீட்டுப்பணிகள் வழங்குவதில் குறைந்தளவு (10.4%) கவனம் செலுத்தப்படுகிறது. பெரும்பாலானோர் (66.7%) ஓரளவு வீட்டுப்பணிகள் வழங்கும்போது குறிப்பிட்ட பகுதியினரால் (20.8%) குறைவாக வழங்கப்படுவதாகவும் அறியமுடிகிறது. ஆங்கில பாடத்தில் சுமார் அரைவாசியினரே (48மூ) அதிகமாக வீட்டுப்பணிகள் வழங்குவதாகவும் அரைவாசிக்கும் குறைவானோர் (40%) ஓரளவாகவும் வழங்குவதாகக் குறிப்பிடுகின்றனர். விஞ்ஞானப்பாடத்தில் அரைவாசியினருக்கு சற்று அதிகமானோர் (56.3%) வீட்டுப் பணிகள் வழங்கப்படுவதாகவும், மிகக் குறைவானோர் (8.3%) குறைவாகவும், 2% மானோர் மிகக் குறைவாகவும் வீட்டுப்பணிகள் வழங்குகின்றனர். வரலாற்றுப் பாடத்தில் பெருமளவில் (42.1% அதிகமாகவும், 31.25% மானோர் ஓரளவும்) வழங்கப்படுகின்றது. எனினும், குறைந்தளவினராலேயே (18.75%) குறைவாக வீட்டுப்பணிகள் வழங்கப்படுவதனையும் அறிய முடிகிறது.

### *7.2 மாணவர்கள் தமது வீட்டுப்பணிகளை பூர்த்திசெய்வதற்கு அவசியமான வறுமையான வீட்டுச்சூழலுடன் தொடர்பான பௌதீகக் காரணிகள்*

மாணவர்கள் தமது வீட்டுப்பணிளை பூர்த்திசெய்வதற்கு அவசியமான வீட்டுச்சூழலுடன் தொடர்பான பௌதீகக் காரணிகள் பெருமளவில் செல்வாக்குச்செலுத்துகின்றது. பெரும்பாலானோர் (68.75%) வீட்டிலிருந்து அவற்றினைப் பூர்த்திசெய்வதாகவும் குறைவானோர் (31.25%) வகுப்பறைகளில் பூர்த்திசெய்வதையும் அறியமுடிகின்றது.

***அட்டவணை 6*** - *மாணவர்களிடமுள்ள பௌதீகக் காரணிகள்*

| **விடயம்** | **கற்கும் அறை** | | **தளபாடங்கள்** | | **மின்சார வசதி** | | **கணணி** | | **இதர நூல்கள்** | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **கிடைத்த பதில்** | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை |
| **மீடிறன்** | 17 | 31 | 39 | 9 | 35 | 13 | 16 | 32 | 18 | 30 |
| **வீதம்** | 35.4 | 64.6 | 18.8 | 81.2 | 73 | 27 | 33.3 | 66.7 | 37.5 | 62.5 |

*(மூலம்:- மாணவர்களுக்கான வினாக்கொத்து அளவியல், 2018)*


மேலும், இம்மாணவர்களில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் (35.4%) தமது வீட்டில் கற்பதற்கென தனியான அறை உள்ள அதெவேளை சுமார் மூன்றில் இரண்டு பகுதியினருக்கு (64.6%) தனியான கற்கும் அறை இல்லாமலுள்ளது. மாணவர்களது வீட்டிலிருந்து கற்பதற்கான தளபாடங்கள், மின்சார வசதி தொடர்பாக வினவப்பட்டது. இதன்படி பெரும்பாலானோருக்கு தளபாடம் (81.25%), கணணி வசதி (66.7%) என்பன இல்லை. ஆனால், மின்சார வசதி (73%) அவர்களிடம் காணப்படுவது உறுதியாகின்றது. மேலும், மாணவர்களிடம் தமது வீட்டுப்பணிகளை பூர்த்தி செய்வதற்கு அவசியமான எழுதுகருவிகள் உள்ளமை தொடர்பாக வினவப்பட்ட போது 87.5 வீதமான மாணவர்கள் தமது வீட்டுப்பணிகளை பூர்த்திசெய்வதற்கு அவசியமான எழுதுகருவிகள், வர்ணம் தீட்டும் உபகரணங்கள் தம்மிடம் உண்டு என பதிலளித்தனர்.

எனினும் மிகக் குறைந்தளவினரே (18.75%) தமது வீடுகளில் கற்பதற்கான தளபாடங்களைக் கொண்டுள்ளனர். அத்துடன் குறித்த தொகை மாணவர்கள் (27%) தங்களது வீடுகளில் மின்சார வசதி, தளபாடம் (18.8%) இல்லாமலும் உள்ளனர். இதனால் பெரும்பாலான மாணவர்கள் வீட்டுப்பாடப் பணிகளை செய்ய முடியாமலுள்ளமை தெளிவாகின்றது.

### *7.3 மாணவர்கள் தமது வீட்டுப்பணிகளை பூர்த்திசெய்வதற்கு அவசியமான வீட்டுச் சூழலுடன் தொடர்புடைய குடும்பக் காரணிகள்*

மாணவர்களிடம் தமது குடும்பத்தில் வசிப்போர் தொடர்பாக வினவப்பட்ட போது பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு அமைகிறது.

வரைபு 1 - குடும்பத்தில் வசிப்போர் விபரம்




*(மூலம்:- மாணவர்களுக்கான வினாக்கொத்து அளவியல், 2018)*

மேலுள்ள வரைபடம் 1 அமைய அட்டாளைச்சேனை கோட்ட அதிக்'ட பிரதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் மிக அதிகமானவர்கள் தங்களது மானோருக்கு தாய் (96%), தந்தை (94%), பாடசாலை செல்லும் சகோதரர்கள் (64%), ஏனைய உறுப்பினர்கள் (38மூ) வசிப்பது தெளிவாகிறது. மேலும் மிகச் சொற்பமானவர்கள் (4%) தாய் இல்லாமலும், 46% வீதமானோர் பாடசாலை செல்லும் சகோதரர்கள் இல்லாமலும் வசிக்கின்றனர்.

*அட்டவணை 7 வீட்டுப் பணிகளைப் பூர்த்திசெய்யும் போது பெற்றோரின் உதவி கிடைக்கும் அளவு*

| அளவு | மீடிறன் | வீதம் |
|---|---|---|
| **அதிகம்** | *09* | *19* |
| **ஓரளவு** | *7* | *14* |
| **குறைவு** | *20* | *42* |
| **இல்லை** | *12* | *25* |

*(மூலம்:- மாணவர்களுக்கான வினாக்கொத்து அளவியல், 2018)*

ஆசிரியர்களால் வழங்கப்படும் வீட்டுப்பணிகளைப் பூர்த்தி செய்யும் செயற்பாடுகளின் போது தாய், தந்தையின் உதவு கிடைக்கும் அளவு காணப்பட வேண்டும் (இனோட், 2001). ''பெற்றோர் பிள்ளைகளுக்கு உதவும் ஆற்றலை விருத்திசெய்வதனால் பிள்ளையின் வினையாற்றல் அதிகரிக்கும்'' (Stevens, 1984). இதனால் ஆசிரியர்களால் வழங்கப்படும் வீட்டுப் பணிகளை பூர்த்திசெய்யும் செயற்பாடுகளின் போது தாய் மற்றும் தந்தையின் உதவி கிடைக்கும் அளவு தொடர்பாக வினவப்பட்டது. மாணவர்கள் கூறியுள்ள கருத்துக்களை நோக்கும் போது தாம் வீட்டுப் பணிகளைப் பூர்த்தி செய்யும் வேளைகளில் தமது தாய் மற்றும் தந்தையின் உதவியை குறைந்த அளவினர் (19%) அதிகமாகவும், அரைவாசி மாணவர்களுக்கு (42%) குறைந்தளவான உதவியும் கிடைக்கின்றது. மேலும், வீட்டுப் பணிகளைப் பூர்த்திசெய்யும் போது பாடசாலை செல்லும் தமது சகோதரர்களால் உதவி கிடைக்கும் அளவு தொடர்பாக வினவப்பட்டபோது உதவி கிடைப்பது கண்டறியப்பட்டது.

வீட்டுப்பணிகளை வீட்டிலிருந்து பூர்த்தி செய்யும் போது மாணவர்கள் எதிர்கொள்ளும் இடர்களை கண்டறியும் நோக்கில் கேட்கப்பட்ட போது பிள்ளைகள் தமது தாய்க்கு வீட்டில் உதவி செய்தல், தாயின் வீட்டு வேலைகளில் அதிக நேரம் உதவுவதல் போன்றவற்றிலும் மாணவர்கள் ஈடபடுகின்றனர். மேலும், பிள்ளைகள் தமது தந்தையுடன் வேலைக்குச் செல்வது தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவனை குறிப்பிடுகின்றது.

அட்டவணை 8 - தந்தையுடன் வேலைக்குச் செல்வோர் தொடர்பான தரவுகள்

| | மீடிறன் | வீதம் |
|---|---|---|
| **அதிகம்** | *6* | *12.5* |
| **ஓரளவு** | *16* | *33.3* |
| **குறைவு** | *14* | *29.2* |
| **இல்லை** | *12* | *25* |

*(மூலம்:- மாணவர்களுக்கான வினாக்கொத்து அளவியல், 2018)*

மேலுள்ள அட்டவணை 8 இன் படி, சுமார் 45.8மூ (12.5+33.3) வீதமான மாணவர்கள் தமது தந்தையுடன் சாதாரணமாக வேலைக்குச் செல்வோராகக் காணப்படுகின்றனர். பொருளாதார வசதி குறைவாக உள்ளமை, கல்விகற்பதற்குப் போதியளவான பணவசதி இல்லாமல் இருப்பதே இதற்குக் காரணங்களாகக் கூறலாம்.

இந்தடிப்படையில் ஒப்பீட்டளவில் அதிகமான மாணவர்கள் (46%) பாட வீட்டுப்பணிகளை வீட்டில் பூர்த்திசெய்து வருவதில்லை. மிக மிக குறைவானவர்களே (7மூ) பூர்த்திசெய்து வருவதும் ஆசிரியர்களுடாக கண்டறயப்படுகின்றது. மேலும், இங்கு மின்சார வசதியுள்ள மாணவர்களின் அதிகமான வீடுகளில் (55%) பெற்றோர் பிள்ளைகளுடன் இணைந்திருந்து தொலைக்காட்சி பார்ப்பதும், திரைப்படங்கள் பார்ப்பதும் அவதானிக்கப்பட்டது. மேலும் வீட்டுப் பணிகளை

மேற்கொள்ளும் இடம், மேசை, கதிரைகள் மற்றும் உபகரணங்கள் ஒழுங்கு படுத்தப்படாமல் காணப்பட்டதனையும் ஆய்வாளர்களால் அவதானிக்க முடிந்தது.

மேலும், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு அறைகளுள்ள வீடுகள் அதிகமாகவும் (45%), குறைந்தளவான (12%) குடிசைகளும் காணப்படுகின்றன. இங்கு சாப்பிடுவதற்கும், தொலைக்காட்சி பார்ப்பதற்கும், கற்பதற்கும் உரிய இடமாக முன்மண்டபம் அதிகமாக பயன்படுத்தப்படுவதும் அவதானிக்கப்பட்டது. அதுமட்டுமன்றி ஒரு சில மாணவர்கள் பாடசாலை லீவு நாட்களிலும், ஓய்வு நேரங்களிலும் கால்நடைகளை மேய்ப்பது, வீதியோரங்களில் சிறு வியாபாரங்களில் ஈடுபடுவதும் (பொன்னாங்கணி, மீன், நிலக்கடலை, பழங்கள்) ஆய்வாளர்களால் அவதானிக்கப்பட்டது.

### *7.4 வறுமையான வீட்டுச்சூழலுடன் தொடர்பான பொருளாதாரத் தடைகள்*

### *7.4.1 பெற்றோர், ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு*

இக்கிராமங்களில் உள்ள பெற்றோர்கள் கூலித்தொழிலை அதிகம் செய்யும் அதேவேளை மிகக் குறைந்தளவானோர் அரச தொழில்களில் உள்நாட்டில் ஈடுபடுவதோடு மிகக் குறைந்தளவிலான பெற்றோர் மத்திய கிழக்கு நாடுகளில் தொழிலுக்காகச் செல்கின்றனர். கூலித் தொழில் எனும் போது கல்லுடைத்தல், மீன்பிடித்தல் விவசாயத்துடன் தொடர்புடைய தொழில்கள் (உதாரணம் வரம்பு கட்டுதல், வேளாண்மை கூலிக்காகச் செய்தல்) போன்ற தொழில்களில் ஈடுபடுபவர்களாகவும் அரசதொழில் எனும் போது சிற்றூழியர்களாகவும் உள்ளனர்.

இப்பிரதேசங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் வாழ்வதோடு இங்குள்ள பெற்றோர்கள் அதிகமாக தரம் 1-5 வரையே கல்வி கற்றுள்ளனர் (Rifas et al, 2018b). மிகக் குறைந்தளவானோர் தரம் 6-10 வரை கற்றுள்ளனர். தமது பிள்ளைகள் பாடவீட்டுப்பணிகளை பூர்த்தி செய்தல் அல்லது செய்யாமை தொடர்பாக ஆசிரியர்கள் சந்தித்து கதைத்ததில்லை என அனைத்துப் பெற்றோரும் குறிப்பிட்டனர். லீவு நாட்கள் மற்றும் ஓய்வு நேரங்களில் பிள்ளைகள் விளையாட்டுக்களில் ஈடுபடுதல் என அதிகமான பெற்றோர் தெரிவிக்கின்றனர். பிள்ளைகள் 1-3 மணித்தியாலங்கள் மாத்திரமே வீட்டில் கற்றலில் ஈடுபடுவதாக அதிகமான பெற்றோர் குறிப்பிடுகின்றனர்.

மேலும், பிள்ளைகளின் பாட வீட்டுப் பணிகளுக்குப் பெற்றோர் வழங்கும் உபகரண உதவிகள் தொடர்பாக வினவப்பட்ட போது "பிள்ளைகள் கேட்கும் உபகரணங்களை உடனே வாங்கிக் கொடுக்காமல் ஓரிரு நாட்களின் பின்னர் வாங்கிக்கொடுப்பதாகவும் சில பொருட்களை வாங்குவதற்கும் பணம் மற்றும் பொருளாதார வசதிகள் போதாது எனவும் கூறினர். "இதனால் பெறப்படுகின்ற வருமானமும் அந்த மக்களின் அன்றாடத் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாதளவுக்கு மிகவும் இழிவானதாகக் காணப்படுகின்றது. இதனால் தங்களின் வாழ்க்கையினை கழிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்" (Rifas et al, 2018b). பிள்ளைகளின் பாட வீட்டுப்பணிகளில் உதவுதல் தொடர்பாக வினவப்பட்டபோது தாங்கள் கூலித் தொழில்களுக்கச் செல்வதால் சொல்லிக் கொடுக்க நேரம் இல்லை எனவும், அதிகம் படிக்கவில்லையாதலால் சொல்லிக் கொடுக்கத் தெரியாது போன்ற கருத்துக்ளையும் அதிகமாக வெளியிட்டிருந்தனர்.

### *7.4.2 ஆசிரியர்களுக்கான வினாக்கொத்துக்களின் பகுப்பாய்வு*

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட அட்டாளைச்சேனை கோட்ட அதிக'டப் பாடசாலைகள் மூன்றிலிருந்தும் மொத்தமாக 14 ஆசிரியர்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டன. இவர்கள் தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமயம், வரலாறு ஆகிய முக்கியமான 06 பாடங்களைக் கற்பிப்பவர்கள் எனும் வகையில் தெரிவு

செய்யப்பட்டனர் வினாக்கொத்தானது திறந்த வினாக்கள் மூடிய வினாக்களுக்கள் என மொத்தமாக 15 வினாக்களை கொண்டமைந்தது.

அதிகஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு வீட்டிலேயே கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக பாட வீட்டுப் பணிகளை ஆசிரியர்கள் வழங்குகின்றமை தொடர்பாக அறியும் பொருட்டும், எவ்வகையான பணிகள் வழங்கப்படுகின்றன தொடர்பாகவும் கேட்கப்பட்டது. இதில் மாணவர்களுக்கான வீட்டுப் பணியாக ஒப்படைகளையும், பயிற்சி வினாக்களையும், செயற்றிட்டங்களையும் எல்லா ஆசிரியர்களும் வழங்குவதாக அவர்களின் பதில்கள் அமைந்திருந்தன. இதன்மூலம் அனைத்து பாடஆசிரியர்களும் வீட்டுப்பணிகளை வழங்குகின்றனர் என்பது தெளிவாகின்றது.

அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளை ஆய்வுப் பிரதேசமாக மையப்படுத்திச் செய்யப்பட்ட இவ்வாய்வின் மூலம் பாடசாலைகளில் வழங்கப்படும் வீட்டுப் பணிகள், குழுச்செயற்பாடுகளாக அல்லது, தனியாள் செயற்பாடுகளாக வழங்கப்படுகின்றன. இவற்றுள் சுயஆக்கத்தொகுப்பு, செயற்றிட்டம், கட்டுரைகள், பயிற்சி வினாக்கள், ஆய்வுகள் மற்றும் புலனாய்வுகள், களப்பயண அறிக்கைகள் போன்றன குறிப்பிடத்தக்கன. இடைநிலை வகுப்புக்களுக்காக வழங்கப்படும் வீட்டுப் பணிகள் வாசிப்பு, மீட்டல், அறிக்கை எழுதுதல், கண்டறிதல், செயற்றிட்டங்கள் எழுதுதுதல் போன்றவற்றைக் குவியப்படுத்தியதாகவும் காணப்படுகின்றன.

## 8. முடிவுரை

பாட வீட்டுப்பணியின் அவசியத்தினை ஆய்வுக்குட்படுத்திய பாடசாலை மாணவர்கள் அனைவரும் ஓரளவேனும் அறிந்துள்ளனர். தமிழ், விஞ்ஞானம், வரலாறு, கணிதம், ஆங்கிலம் மற்றும் சமயம் போன்ற முக்கியமான பாடங்களில் வீட்டுப் பணிகள் மாணவர்களுக்கு தனிச்செயற்பாடாகவே பெருமளவில் வழங்கப்படுகிறது. தமது வீட்டுப் பணிகளைப் பூர்த்தி செய்வோர் மிகக் குறைந்தளவு மாணவர்களே. இப்பிரதேசத்தில் அதிகமான மாணவர்களுக்கு கற்பதற்கான பௌதீக வசதிகள் மிகவும் குறைந்தளவில் காணப்படுகின்றமை, குறிப்பாக கற்றலுக்கான தனியான அறை இன்மை, மின்சார வசதிறைப் பெற்றிராமை, கணனி பயன்பாடு இன்மை, பாடநூல்கள் தவிர்ந்த தேவையான வேறு நூல்கள் போதாமை, பெற்றோரின் பணிகளில் மாணவர்கள் ஒத்தாசை என்பன மாணவர்கள் தமது வீட்டுப் பணிகளை வினைத்திறனுடன் பூர்த்தி செய்வதற்குப் பொருத்தமான சூழல் வறுமையான வீடுகளில் இல்லை என்பதற்கு ஏதுவாகின்றன. மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு ஏற்ப தமது சூழல் நிலைமைகளை மாற்றியமைக்க அல்லது ஒழுங்கமைக்க கல்வி நிருவாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆவண செய்யவேண்டும். அதற்கான விதந்துரைகளை முன்மொழியப்படுவதற்கான பின்புலங்களையும் அவதானக்குறிப்புகளை இவ்வாய்வு முன்வைக்கிறது.

## உசாத்துணைகள்

அருள் மொழி, செ., (2008) கல்வி ஆய்வு முறைகள், மட்டக்களப்பு, எவக்கிறீன் பிரின்டர்ஸ்.

கருணாநிதி.மா., (2008) கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள், கொழும்பு, சேமமடு புத்தகசாலை

சந்தாணம், எஸ்., (1994) கல்வியும் சமூகமும், சென்னை, சாந்தா பப்பிளிசர்ஸ்.

சந்திரசேகரன், சோ.,(2008) சமகாலக் கல்வி முறைகளின் சில பரிமாணங்கள், கொழும்பு, சேமமடு பதிப்பகம்.

சின்னத்தம்பி, க., (2007) கல்வி ஆய்வியல், அச்சுவேலி, யாழ்ப்பாணம், ''வளர்மதி''

சித்திரபுத்திரன், எச்., சண்முகம், ஆ.,(2005) ஆராய்ச்சி முறைமைகள், தஞ்சாவூர்

செல்வராசா, மா., (2005) கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள், கிறிப்ஸ்

செல்வராஜா, மா., (2006) முன்பள்ளிக்கல்வி, சிந்தனைகளும் செயற்பாடுகளும், மட்டக்களப்பு, கௌரி வெளியீட்டகம்

பக்கீர் ஜ்ஃபர், ப. க., (2009) கல்வியியல் ஆய்வொன்றைத் திட்டமிடல்,

கொழும்பு – சென்னை, குமரன் புத்தக இல்லம்

பெரியகருப்பன், இரா., (தமிழண்ணல்), இலக்குமணன், எம்.எஸ்., (1998) ஆய்வியல் அறிமுகம், மதுரை, மீனாட்சி புத்தக நிலையம்

முத்துலிங்கம், ச., (2002) கல்வியும் உளவியலும் கொழும்பு, லங்கா புத்தகசாலை

ஜெயராசா, சபா., (2005) குழந்தை உளவியல், கொழும்பு, பூபாலசிங்கம், புத்தகசாலை

ஜெயராசா, சபா., (2006) ஆய்வு முறையியல், யாழ்ப்பாணம், புக்லேப்

ஜெயராசா, சபா., (2008) கல்வியியலும் கணிப்பீட்டியலும், கொழும்பு சேமமடுப் பதிப்பகம்

ஜெயராசா, சபா., (2008) கற்றல் உளவியல், கொழும்பு, சேமமடுப் பதிப்பகம்

ஜெயராசா, சபா., (2008) கல்விச் சமுகவியல், கொழும்பு, சேமமடுப் பதிப்பகம்

ஜெயராசா சபா., (2008) சந்திரசேகரன், சோ., (2009) கல்வியலும் நிகழ்பதிவுகளும், கொழும்பு, சேமமடுப் பதிப்பகம்.

விக்கிரமசிங்க, வை.எம்., ரூபசிங்க.செ., (தமிழ் மூலம்) (2004) சமூக விஞ்ஞான ஆய்வுகள், அனுராதபுரம், YM.விக்கிரமசிங்க

வைத்தீஸ்வரன், கா., (2004) பாலர் பராமரிப்பு, கொழும்பு, கீதா பப்ளிகேசன்.

ஹேய்ம் ஜி இனோட்., (2001) குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே, கொழும்பு, மூன்றாவது மனிதன் பதிப்பகம்.

Department of Edcation, United States (2002). Helping your chiled with homework for parents of children in elementary through middle school, washingon USA

Rifas et al., (2018a). "வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்: சம்புநகர் கிராமத்தை மையப்படுத்திய கள ஆய்வு" 05 வது சர்வதேச ஆய்வரங்கு, இஸ்லாமிய கற்கைகள் அறபு மொழி பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

சந்திரசேகரன்இ சோ.இ (2007) பிள்ளைகளின் கல்விஇ பெற்றோர்கள் ∴ ஆசிரியர்களுக்கான சில ஆய்வுக்குறிப்புகள்இ அகவழிஇ ப.ப 23-25

புண்ணியமூர்த்திஇ கி., (மே, 2010)இ பாடசாலைக்கும் பெற்றோர்களுக்குமான விளைத்திறன்மிகு தொடர்பாடல்இ அகவழிஇ ப.ப 6-8

பாடசாலை அடிப்படையிலான கணிப்பீட்டு வேலைத்திட்டம்இ அறிவுறுத்தல் கையேடு(2006) ஆசிரிய வள நிலையம்இ வலயக்கல்வி அலுவலகம்இ யாழ்ப்பாணம்.

ஜேரே ப்ரோ∴பிஇ(2007)இ பெற்றோரும் கல்வியும் இ குமரன் புத்தக இல்லம்இ கொழும்பு சென்னைஇ (சர்வதேச கல்விமன்றம்)

மகிழ்வுடன் வாழ்தல் (2005)> GTZ, NIE, pp, 25-30

லோகேஸ்வரன், ஆர்., (ஜூலை 2008) கற்றலை பாதிக்கும் காரணிகளும் ஆசிரியரும்இ அகவழிஇ பப:5-10

Rifas et al., (2018b). "அட்டாளைச்சேனைப் பிரதேச மக்களின் வாழ்வாதார நிலை: ஆலங்குளம் கிராமத்தை மையப்படுத்திய கள ஆய்வு" 07 வது சர்வதேச ஆய்வரங்கு, கலை மற்றும் கலாசார பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

Summary of key research findings (November 2004), Homework literature review, Department of Education and the Arts, Queensland Government.

Homework Tips for Parents-No child left behind (2003), U.S.A Department of Education.

Smelser, N. J. and Baltes, P. B. (eds.) (2001). International Encyclopaedia of the Social and Behavioural Sciences. Elsevier. Oxford Science Ltd.

Roy I.B. and Alice, S. (2018). The Background and Development of Quality of Life and Family Quality of Life: Applying Research, Policy, and Practice to Individual and Family Living, *International Journal of Child, Youth and Family Studies* 9(4), 1–11.

Kober, R. (Ed.). (2010). Enhancing the quality of life of people with intellectual disabilities: From theory to practice. Dordrecht, The Netherlands: Springer.

Krishnasamy, M., Li, J.-Y., & Chen., D.-T. (2016). Transition outcomes through the lens of quality of life: Proposing a consolidated framework. *Journal of Intellectual & Developmental Disability*. 41(4), 360–369.